# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 52/2024

| | |
|---|---|
| | Prosecution PW 2 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | ரமேஷ் |
| Father's Name | : | கதிர்வேல் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 21.04.2025

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் புலியூரில் கணேசபுரத்தில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். குருசாமியை எனக்கு தெரியும். 2.7.2022 ம் தேதி இரவு சுமார் 9.15 மணியளவில் நான் புலியூர் டீச்சர்ஸ் காலனி அருகிலுள்ள டீக்கடையில் டீ சாப்பிட்டு விட்டு புலியூர் நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது எனக்கு முன்னால் பிளாட்டினா இருசக்கர வாகனத்தில் புலியூர் சாலையில் ரோட்டிற்கு வடபுற ஓரமாக கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தோம். அவருக்கு முன்னே ஈச்சர் லாரி கம்பி லோடு ஏற்றி திருச்சி

**(Sd)S.P.** பரத்குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

நோக்கி சென்று கொண்டிருந்தது. திருச்சி நோக்கி சென்று கொண்டிருந்த லாரி திடீரென்று எந்தவித சிக்னலும் செய்யாமல் பிரேக் அடித்ததால் பின்னால் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த குருசாமி லாரியின் பின்புறமாக மோதி கீழே விழுந்து விட்டார். அதில் அவருக்கு தலை, நெற்றி, கழுத்து, நெஞ்சு, கை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் அவரை கரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். இந்த சம்பவம் குறித்து அ.சா.1 வீட்டிற்கு சென்று தகவல் சொன்னேன். ஈச்சர் லாரியின் பதிவு எண். TN 47 AM 8114 ஆகும். ஆஜர் எதிரிதான் விபத்து ஏற்படுத்திய லாரியின் ஓட்டுனர் ஆவார். பிளாட்டினார் இருசக்கர வாகனத்தின் பதிவு எண். TN 47 Y 2056 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

விபத்தில் இறந்துபோனவர் எனக்கு உறவினர் அல்ல. பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். சம்பவம் நடந்தபின்னர் சம்பவ இடத்திற்கு போலீசார் அரை மணிநேரத்தில் வந்துவிட்டார்கள். அப்போது போலீசார் என்னிடம் விசாரணை செய்தார்கள். அதன் பின்னிட்டு போலீசார் என்னிடம் விசாரணை எதுவும் செய்யவில்லை. விபத்தில் அடிபட்டவுடன் மருத்துவமனைக்கு யார் யார் சென்றார்கள் என்றால் கிஷோர் மற்றும் பாலு என்பவர்கள் அடிபட்டவருடன் உடன் சென்றார்கள். இந்த விபரத்தை போலீசாரிடம் சொல்லியுள்ளேன். போலீசார் விசாரணையில் விபத்து ஏற்படுத்திய லாரியின் ஓட்டுனரை நான் பார்த்ததாக சொன்னேனா என்றால் இல்லை. மேற்படி லாரி ஓட்டுனரை பிடித்து போலீசாரிடம் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். ஏன் ஒப்படைக்கவில்லை என்றால் விபத்து ஏற்படுத்தியவுடன் அவர் ஓடிவிட்டார். மேற்படி லாரி ஓட்டுனரின் பெயர் முகவரி எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் கரூர் - திருச்சி தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். மேற்படி சாலையில் சென்டர் மீடியன் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ரோட்டிற்கு தென்புறமும் வடபுறமும் வாகனங்கள் நிறுத்தும் அளவிற்கு மண்சாலை உள்ளது என்றால் இல்லை. நான் நின்று கொண்டிருந்ததாக சொல்லப்படும் டீக்கடைக்கும் தார்சாலைக்கும் இடையே சுமார் 10 மீட்டர் துாரம் இருக்கும். அந்த இடத்தை சுற்றி கடைகள் குடியிருப்புகள் இருக்கும் என்றால் சரிதான். நான் அந்த இடத்தில் வசிக்கும் நபரோ அல்லது தொழில் செய்யும் நபரோ

**(Sd)S.P.** பரத்குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

இல்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தின்போது அந்த பகுதியில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோனவர் எனது பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோனவர்தான் சாலையின் இடதுபுறம் ஓரத்தில் நின்றுகொண்டிருந்த வாகனம் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**(Sd)S.P.** பரத்குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**